2013 மே 6] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

பெற்றோர்களுக்கு எந்தவகையான பழங்குடியின சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறதோ, அப்படித் தகுதி இருக்கின்றபட்சத்தில் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கட்டாயமாக பழங்குடியின சாதிச் சான்றிதழ்களை வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

***திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரக்க குணமும், ஈகைத் திறனும் கொண்ட எழுச்சியின் வடிவே! 7 கோடி தமிழக மக்களின் அன்புத் தாயே! எளியோர் நலன் காக்க எந்நாளும், எந்நேரமும் கண் துஞ்சாது பாடுபடும் கருணைத் தாயே! தமிழ்நாடு முழுவதும் விவசாயப் பயிர்களுக்கு வறட்சி நிவாரணம் வாரி வழங்கிய எங்கள் வாழும் வள்ளலே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் திருநாட்டின் முதலமைச்சர்களின் முதன்மையானவரே! மீனவச் சமுதாயத்தை நிரந்தரமாகக் காக்கும்வகையில் கச்சத் தீவைத் திரும்பப்பெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இந்தச் சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றிய உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

2012—2013 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து மூன்று முதல் நாற்பத்து எட்டு வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.